(ஆ) தஞ்சை மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் ஏற்பட்டுள்ள நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. சுப்பராயன், பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் தஞ்சை மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை காலி செய்யவேண்டிய நிர்பந்திப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம் கோட்டூர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி சென்ற 1982-ம் ஆண்டு முதல் அருள்மிகு கொழுந்தீஸ்வரர் ஆலயத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் சுமார் 340 பேர்கள் படிக்கிறார்கள். இந்த கட்டிடத்திற்கு பள்ளி வளர்ச்சிக்குழு மாதம் ரூ. 200 வாடகை தர அருள்மிகு கொழுந்தீஸ்வரர் தேவஸ்தான அதிகாரியிடம் ஒப்புதல் அளித்து உள்ளதாக தெரிகிறது. ஆனால் இதுவரை பள்ளி வளர்ச்சிககுழு தேவஸ்தானத்திற்கு எந்தவித வாடகையும் கொடுத்ததாக தெரியவில்லை. இதுபற்றி தேவஸ்தானத்திற்கும் பள்ளி வளர்ச்சி குழுவிற்கும் இடையே சுமுகமான உடன்பாடு ஏற்படுத்த பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

2. மேற்படி பள்ளிக்கு ரூ. 2.40 லட்சம் செலவில் தனி கட்டிடம் கட்டவும் ஏற்பளிக்கப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கு உரிய இடத்தை தேர்வு செய்து கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் 1982-ஆம் ஆண்டு முதல் அருள்மிகு கொழுந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இந்த பெண்கள் உயர்நிலைப்பள்ளி, வாடகைக்காக இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கோட்டூருக்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை நம்முடைய

1987 ஏப்ரல் 1] [திரு.பொ. உத்திராபதி]

அரசு கொடுத்து உதவி இருப்பதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கோட்டூர் பகுதி என்பது முழுமையிலும் 70 சதவீதம் கிட்டத்தட்ட ஆதிதிராவிடர்கள், ஏழை விவசாய தொழிலாளர்கள் வாழ்கின்ற பகுதி என்று கருதித்தான் கொடுக்கப்பட்டது. ஆனால் அந்தப் பகுதியில் படிக்கக்கூடிய மாணவிகளுக்கு இந்த வாடகைக் கட்டிடத்திற்காக மாதா மாதம் 200 ரூபாய் கட்டுவது என்பது அங்கு இருக்கக்கூடிய பெற்றோர் சங்கத்தால் முடியவில்லை. இன்றைக்கு 7 ஆயிரம் ரூபாய்க்கு மேல் அதிகமாக தொகை தேக்கம் ஏற்பட்டுள்ளதால், அந்தத் தொகையைக் கட்ட முடியவில்லை என்பதால் காலி செய்யச் சொல்கிறார்கள். இதற்குமுன் இன்னொரு கட்டிடத்திலே வைத்திருந்து, அதிலும் இந்த மாதிரிப் பிரச்சினை வந்து காலி செய்து விட்டார்கள். அதற்குப்பிறகு இவர்கள் மனமுவந்து கொடுத்தார்கள். ஆகவே 7 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக கட்ட முடியாத நிலைமை இருப்பதால், அதற்கு அரசு தரப்பிலிருந்து, ஏதாகிலும் உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் அதற்குத் தனியாகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அதைக்கூட நேற்று 31 ஆம் தேதியோடு திருப்பிக் கொடுத்துவிடப் போவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம், அந்தப் பகுதியில் தனியார் இடமோ அல்லது புறம்போக்கான இடமோ ஜாஸ்தி கிடையாது. ஆகவே அந்தக் கோயிலுக்குச் சொந்தமான இடம்தான் 173/3லே 3 ஏக்கர் 95 செண்டும், 173/4லே 64 செண்டும், மொத்தம் 4 ஏக்கர் 59 செண்ட் இருக்கிறது. இந்த இடத்தை அந்தப் பெற்றோர் சங்கச் சார்பாக கேட்கிற போது, தஞ்சை மாவட்டத்தினுடைய கோயில் அதிகாரி, மார்க்கெட் ரேட்டுக்கு நீங்கள் எழுதிக் கொடுத்தால்தான், அறநிலையத்துறை கமிஷனுக்கு எழுதி சிபாரிசு செய்ய முடியும் என்று அவர்கள் வரையறுத்து விட்டார்கள். நான் கேட்டுக்கொள்வது எல்லாம், முழுமையாக அறநிலையத்துறையின் மூலமாக இனாமாகக் கொடுக்க முடியாமல் இருந்தாலும்கூட, அந்தப் பகுதி மக்களிடமிருந்து கொஞ்சம் வசூல் செய்து, அந்த இடத்தை வாங்குவதற்கு நாங்கள் முயற்சி எடுத்திருக்கிறோம். இதை மனதிலே வைத்துக்கொண்டாவது அந்த இடத்தை சர்க்காருடைய விலையின் பாதி விலையையாவது கொடுக்க நாங்கள் முன் வந்திருக்கிறோம். எனவே அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடப்பணியை முடித்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். அதைப் போலவே

அங்கே அரசுப் புறம்போக்கு நிலம் 41 சென்ட் இருக்கிறது. அதைத் தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டதற்கும் அவரும் மேலே பெர்மிஷன் கேட்டு எழுதியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆக, அந்த இடங்களை வாங்கியாவது அரசு துரித நடவடிக்கை எடுத்து கட்டிடம் கட்டிக் கொடுத்து பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத்தை உருவாக்கி பெண்கள் அங்கே நன்கு படிக்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் மூலமாகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாகவும் இந்தக் கோரிக்கைகளையெல்லாம் எழுத்து மூலமாக அரசுக்குத் தந்தால் அதிகாரிகளுக்குத் தக்க ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) மறைமலை நகரிலுள்ள உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டியதன் அவசியம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. சாமிக்கண்ணு அவர்கள் பெயரில் இருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவருக்குப் பதிலாக திரு. டி. எம். வெங்கடாசலம் அவர்கள் மாண்புமிகு கலவி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு டி. எம். வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு வைப்பு நிதியாக அரசுக்கு ரூ. 32,000/-ம் 1986ஆம் ஆண்டே பொதுமக்களால் செலுத்தப்பட்டிருந்தும் இதுவரை அதற்காக எவ்வித ஆணையும் பிறப்பிக்காமலிருப்பதால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரசு நிதிநிலை இடந்தருவதற்கு உட்பட்டும் பல்வேறு இடங்களின் தேவைகளை ஒப்பு நோக்கியும் ஆண்டுதோறும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசு அனுமதித்து வருகிறது.